விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 தை 25 வியாழக்கிழமை (08.02.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 51

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதல்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## கடந்த மாதம் மட்டும் 53 இராணுவத்தினர்பலி

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடனான மோதல்களின்போது கடந்த மாதம் 53 இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளதாக பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இக் காலப்பகுதியில் 101 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாகவும் 200 பொதுமக்கள் காயமடைந்துள்ளதாகவும் விடுதலைப்புலிகளின் தாக்குதலில் 181 பாதுகாப்புப் படையினர் காயமடைந்துள்ளதாகவும் பிரதமர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகள் மீதான தடையை மேற்குலக நாடுகள் நீக்க வேண்டும்

### இடதுசாரி முன்னணி வேண்டுகோள்

(லண்டன்)

மகிந்த ராஜபக்ஷ அரசுக்கு 4.5 பில்லியன் டொலர் நிதி உதவியை வழங்க இணங்கிய சர்வதேச சமூகம் அந்த நாட்டில் அமைதி உருவாக வேண்டும் என்று விரும்பினால் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கி பேச்சுவார்த்தைகளில் அவர்களும் சமதரப்பாகக் கலந்துகொள்ள ஏதுவான நிலையை உருவாக்க முன்வரவேண்டுமென இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

இலங்கையின் (04 ஆம் பக்கம் பார்க்க)

# போர் நிறுத்த உடன்படிக்கையை இரு தரப்பினருமே மீறுகின்றனர்

## கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கையை இரண்டு தரப்பினரும் மீறுகின்றபோது ஒருவர் மீது மட்டும் அதற்கான பொறுப்பைச் சுமத்துவது கடினமானது. பதில் நடவடிக்கைகள் எடுக்கப்படுமானால் அது தொடச்சியான மோதல்களுக்கே வழிவகுக்கும் என இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொர்பினூர் ஓமர்சன் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## சு.கவின் தீர்வு யோசனைகள் இவ்வாரம் சமர்ப்பிக்க ஏற்பாடு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனைகள் சர்வகட்சி ஆலோசனைக்குழுவிடம் இவ் வாரத்திற்குள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

அந்தத் தீர்வுத் திட்டத்தில் மகிந்த சிந்தனைக்கு சமாந்தரமான கொள்கைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் அநுராவுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

தேசிய ஒருங்கிணைப்பு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கவுக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தலையடுத்து அவரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஜனாதி பதிக்கு எதிராகச் செயற்பட்டால் கடத்திச் சென்று கொலை செய்யப்படும் என அநுராவுக்கு தொலைபேசி மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டிருந்தது.

இது குறித்து அவர் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார். இந் நிலையில் அவரின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. மிரட்டல் சம்பவம் குறித்து அமைச்சர்களுக்கான பாதுகாப்புப்பிரிவுப் பொலிஸில் முறையிடப்பட்டது. இது குறித்து ஆராய்ந்த பொலிஸ் குழு அவரின் பாதுகாப்பை அதிகரிக்க முடிவு செய்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச)

## சிறுவர்களை படையில் சேர்ப்பதற்கு எதிரான உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்து!

(கொழும்பு)

சிறுவர்களை பலாத்காரமான ஆயுதப் படைகளில் இணைத்துக் கொள்வதற்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கும் பொருட்டு பிரான்ஸில் இடம் பெற்ற மாநாட்டில் முன்வைக்கப்பட்ட 'பாரிஸ் வாக்குறுதிகள்' என்ற பிரகடனத்தில் இலங்கை அரசாங்கமும் கைச்சாத்திட்டுள்ளது.

சிறுவர்கள் கடத்தப்படல், கட்டாயமாக படையணிகளில் இணைத்துக் கொண்டு அவர்களை மோதல்களில் ஈடுபடுத்தல் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல்கள் போன்ற மனிதாபிமானமற்ற குற்றங்களுக்கு எதிராக மிகக்கடுமையான நடவடிக்கைகள் எடுக்க இணங்குவதாக இலங்கை உட்பட 58 சர்வதேச நாடுகள் இந்தப் பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

இவ்வாறான (04 ஆம் பக்கம் பார்க்க)

## முருங்கன் கடற்பரப்பில் புராதன பீரங்கி மீட்பு

(கொழும்பு)

முருங்கன் கடற்பரப்பில் புராதன பீரங்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது. குறித்த பிரதேசத்து மீனவர்கள் வழங்கிய தகவலையடுத்து சுழியோடிகள் கடலுக்கடியில் 250 அடி ஆழத்தில் இருந்து இப் பீரங்கியினை மீட்டுள்ளனர்.

சுமார் ஆயிரம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சி தாவிய உறுப்பினர்களை நீக்க ஐக்கிய தேசியக்கட்சி முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து விலகி அரசுக்கு ஆதரவு கொடுத்த பாராளுமன்ற உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்க அக்கட்சி முடிபெடுத்துள்ளது. நேற்று முன்தினம் மாலை ஐ.தே.கவின் தலைமைச் செயலகமான சிறீகோதாவில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தின் போது அதில் பங்கு பற்றிய 76 செயற்குழு உறுப்பினர்களால் இந்த முடிபு ஏகமனதாக எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் கட்சியை (04 ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதம் நீடிப்பு

(கொழும்பு)

அவசர காலச் சட்டம் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. அவசரகால சட்டம் 105 மேலதிக வாக்குகளினால் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதுடன் இதற்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 17 வாக்குகளும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## சுட்டுக்கொலை கரவெட்டியில்...

(துன்னாலை)

வடமராட்சி கரவெட்டி கிழவிதோட்டம் பிள்ளையார் கோவில் பகுதியில் நேற்றுக் காலை இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். அப் பகுதியில் பதுங்கியிருந்த இராணுவத்தினர் அவ் விளைஞன் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞனின் சடலம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய தேசியக் கட்சிக்கான வாக்கு எண்ணிக்கை குறையவில்லை

### ஐ.தே.க.பேச்சாளர் கஜந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 18 பேர் அரசாங்கத்துடன் இணைந்துள்ள நிலையில் மக்கள் மத்தியில் கட்சிக்கு இருக்கும் ஆதரவு தொடர்பாக உத்தியோகபூர்வமற்ற கணக்கெடுப்பொன்றை ஐ.தே.க.நடத்தியுள்ளது.

அமைச்சுப் பகுதிகளுக்கு ஆசைப்பட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசுடன் இணைந்தாலும் ஐ.தே.கவுக்கான வாக்கு எண்ணிக்கை குறையாது. எமக்கு ஆதரவாக 4.7 மில்லியன் வாக்காளர்கள் உள்ளனர்.

நாளுக்கு நாள் ஆதரவாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கிறது என ஐ.தே.கவின் பேச்சாளர் கஜந்த கருணாதிலக தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## வேலணை மேற்கில் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு நாவலர் சன சமூக நிலையத்தை அண்டிய பகுதியில் நேற்று பகல் ஷெல் வீழ்ந்து வெடித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

பாரிய சத்தத்துடன் வெடித்த இந்த எறிகணை காரணமாக எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுவதுடன், இந்த எறிகணை எங்கிருந்து ஏவப்பட்டது என்பது தமக்கு தெரியவில்லை என்று பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். (ச-3)



# கைது செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் குண்டுவெடிப்புடன் தொடர்புடையவர்கள்

## இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவிப்பு

ஊடகவியலாளர்கள் என்ற பெயரில் தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த் மூவரை தாம் கைது செய்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இவர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணைகளையடுத்து இம்மூவரும் நேற்று கைது செய்யப்பட்டனர் எனவும் அவர் கூறினார்.

கடத்தப்பட்டதாகக் கூறப்பட்ட ஹிரு பத்திரிகையின் சுதந்திர ஊடகவியலாளர் உபாலி செனவிரட்ன, தொழிற்சங்கவாதியும் அக்குண பத்திரிகையின் ஆசிரியருமான சிசிர குமார மற்றும் சுதந்திர ஊடகவியலாளர் நிஹால் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர் என நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இவர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் நாட்டில் பல்வேறு பகுதிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வெடிபொருள்களையும் ஆயுதங்களையும் இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் சி-4 வெடிகுண்டு மருந்து 6 கிலோக்கிராம், ரி-56 ரகத் துப்பாக்கிகள், ரபில்ஸ், ரவைகள், கைக்குண்டுகள் போன்றவை அடங்கும் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது கைது செய்யப்பட்ட மூவரும் பொலிஸாருக்கு வழங்கிய வாக்குமூலத்தின் வீடியோ காண்பிக்கப்பட்டது.

இதில் கருத்துத் தெரிவித்த ஹிரு பத்திரிகையின் சுதந்திர ஊடகவியலாளர் உபாலி செனவிரட்ன கூறியதாவது,

ஆரம்பத்தில் ஜே.வி.பியுடன் இணைந்து செயற்பட்டு வந்த நான் அவர்களது கொள்கை பிடிக்காமல் அக்கட்சியிலிருந்து விலகிச் சென்றேன். நாடு பாதாளத்திற்குள் செல்வதை பார்த்து பொறுத்துக் கொள்ள முடியாமல் தனியான ஓர் அமைப்பை ஏற்படுத்தி போராட்டத்தைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் இருந்தது.

இதனால் நான் விடுதலைப்புலிகளின் உதவியை நாடினேன். ரவி என்பவர் ஊடாக புலிகளைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்கள் என்னை கிளிநொச்சிக்கு அழைத்துச் சென்று ஆயுத பயிற்சி அளித்தார்கள். அத்தோடு ஆயுதங்களையும் தந்தார்கள்.

கொழும்பில் இடம்பெற்ற சில குண்டு வெடிப்புகளுக்கு நான் எனது சகாக்களும் ஒத்துழைப்பு வழங்கியதோடு எங்களுக்குத் தேவையான ஆயுதங்களையும் பெற்றுக் கொண்டோம் எனத் தெரிவித்தார்.

இதுதவிர கைது செய்யப்பட்ட ஏனைய இரு ஊடகவியலாளர்களினது வீடியோக் காட்சிகளும் காண்பிக்கப்பட்டது. இதன்போது தாமும் நாட்டில் இடம்பெறும் அசம்பாவிதங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் போராட ஆயத்தமானதாகத் தெரிவித்துள்ளனர். (எ-1)

# பரீட்சை அனுமதி அட்டை தபால் மூலம் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியில் ஆளணி உதவியாளர்களுக்கு விண்ணப்பித்தவர்களில் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியானவர்களது பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சைத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் இது சம்பந்தமாக இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்து விபரங்களை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (ச)

# சங்கம நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சீடா, பிற் நிறுவனங்களின் அனுசரணையுடன் அறவழிப் போராட்டக் குழுவினரால் நடாத்தப்படும் சிறுவர் நட்புறவுச் சங்கம நிகழ்வு நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் போக்கட்டி அ.த.க.பாடசாலையின் முன்னாள் அதிபர் வி.கணபதிப்பிள்ளை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

இந்நிகழ்வுக்கான ஏற்பாட்டை கொடிகாமம் தெற்கு சிறுவர் கழகம் மேற்கொண்டுள்ளது. (ச)

# ஆட்கடத்தல்கள் தொடர்பாக ஜனாதிபதியிடம் முறைப்பாடு

அதிகரித்திருக்கும் ஆட்கடத்தல்களை முடிபுக்குக் கொண்டு வந்து குற்றவாளிகளைச் சட்டத்தின் முன்நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென சமூக அபிவிருத்தி மற்றும் சமூக சமத்துவமின்மை ஒழிப்பு அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான பெ.சந்திரசேகரன் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடத்தல் சம்பவங்கள் அதிகரித்த அளவில் இடம்பெற்று வருவதுடன் மலையகப் பகுதிகளிலும் தற்போது கடத்தல் சம்பவங்கள் பரவலாக ஆரம்பித்திருப்பதாகச் சுட்டிக்காட்டிய அமைச்சர், கடத்தப்பட்டவர்களின் குடும்பத்தினரிடமிருந்து பல முறைப்பாடுகள் தனக்குக் கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை அதிகரித்திருக்கும் கடத்தல் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுத்திருப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றக் குழுவிடம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பதுடன் சந்தேக நபர்களைக் கைது செய்யவும் நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (எ-1)

# பூசாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 31 இளைஞர்கள் விடுவிக்கப்பட்டனர்

காலி பூசா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 31 இளைஞர்கள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் புதுக்கடை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டுபின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

வத்தளை, கொட்டாஞ்சேனை மற்றும் புறக்கோட்டைப் பகுதிகளில் கைது செய்யப்பட்ட இளைஞர்களே உரிய விசாரணைகளையடுத்து விடுதலையாகியுள்ளதாக பிரதி அமைச்சர் பி.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் பூசா தடுப்பு முகாமில் இருந்து 90 பேர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனையவர்களையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

# நெல் விளைச்சலில் வீழ்ச்சி யாழ்.விவசாயிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் காலபோக நெல் அறுவடை ஆரம்பமாகியுள்ள்து. நெல் விளைச்சல் பெருமளவில் வீழ்ச்சியடைந்திருப்பதால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

யாழ்.குடாநாட்டில்மாரிமழையை நம்பியே பெருமளவில் காலபோக நெற்செய்கை நடைபெறுகின்றது. ஒரு சில இடங்களில் மட்டும் கிணற்றிலிருந்து நீர்ப்பாய்ச்சி நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

நெல் விதைக்கும் காலப்பகுதியில் அசாதாரண சூழ்நிலை காணப்பட்டதையடுத்து கணிசமான வயல்களில் நெல் விதைப்புச் செய்யப்படவில்லை.

பயிரிடப்பட்ட நெல்லும் மழை உரிய அளவில் பெய்யாத காலநிலை மாறுபாட்டால் விளைச்சலின்றி கருகி மடிந்த நிலையில் சப்பியாகி, விளைச்சல் மிகவும் வீழ்ச்சியடைந்துள்ளது. பெரும் பொருள் செலவில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் நெல் அறுவடை காலத்தில் பலத்த ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

ஒரு சில தாழ்நில வயல்களிலும் கிணற்றினால் நீர்ப்பாசனம் செய்யக் கூடிய முறையில் பயிரிடப்பட்ட இடங்களிலும் நெல் கணிசமான அளவு விளைச்சல் கண்டுள்ளது.

சில விவசாயிகள் அதிக செலவில் நெல்லுக்கு நீர் பாய்ச்சுகின்றனர். நெல் அறுவடை செய்யப்படுவதால் உள்ளூர் நெல்லில் இருந்து தயார் செய்யப்பட்ட நாட்டரிசி மற்றும் உடையல், பச்சையரிசி, தீட்டல் பச்சையரிசி என்பன சந்தைகளில் ஒரு கிலோ நூறு ரூபாவிலிருந்து 160 ரூபா வரையும் அரிசியின் தரத்துக்கு ஏற்ப விற்பனை செய்யப்படுகின்றன.

நெல் விதைக்கப்பட்ட காலப்பகுதியில் பயன்படுத்தப்படுவதற்கு இரசாயன உரப் பசளைகள் மற்றும் கிருமிநாசினிகள், களைகொல்லிகள் இல்லாத சூழ்நிலையில் மழையும் பொய்த்ததால் விளைச்சலை பெருமளவில் பாதிப்படையச்செய்து விட்டது என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (எ)

# மானிப்பாயைச் சேர்ந்த 10 பேர் படகு மூலம் இந்தியா சென்றனர்

(சென்னை)

இலங்கையிலிருந்து படகுமூலம் தமிழகம் சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பத்துப் பேர் விசாரணையின் பின் மண்டபம் முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெறும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இலங்கையில் இருந்து அடைக்கலம் தேடி இந்தியாவிற்கு இடம்பெயர்ந்து செல்கின்றனர்.

மானிப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த குலேந்திரன் பிரபாகரன் (வயது-33) அவரது மனைவி பிரபாகரன் உஷாநந்தினி (வயது - 30), பிள்ளைகளான சிந்துஜா, சிந்துஜன், பவுன்ஜா, சசிதரன், தவீசன் ஆகியோரும்,

இவர்களுடன் ராஜேஸ்வரன் (வயது-36), சிவலிங்கம் (வயது-27), சத்தியன் (வயது-25) ஆகிய பத்துப் பேர் கடந்த ஐந்தாம் திகதி படகு மூலம் பெருங்குழித் தீவுப் பகுதிக்கு சென்றடைந்துள்ளனர்.

இவர்கள் இந்தியக் கடற்படையினரால் மீட்கப்பட்டு புதுக்கோட்டைப் பட்டினத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்தியக் கடற்படையினர் மற்றும் பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் நேற்று மூன்தினம் மண்டபம் முகாமுக்கு இவர்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ச-3)

# நாட்டுப்பற்றாளர் நவரத்தினத்திற்கு கனடாவில் முத்திரை வெளியீடு!

(கனடா)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினத்தின் நினைவாக கனடாவில் அவரது படத்துடன் கூடிய முத்திரை ஒன்று வெளியிடப்பட்டது.

இலங்கை அரசின் வெளிவிவகார அமைச்சின் சர்வதேச பிரசாரக் குழு கனடியத் தூதரகத் தொடர்புகளூடாக இதைக் கடுமையாக எதிர்த்ததுடன் இந்த முத்திரை வெளியீட்டை நிராகரித்து மீளப்பெறுமாறு கோரிக்கை விடுத்தது.

இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராடுவதன் மூலமே இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று கிடைக்கும் என்று கூறியதன் மூலம் இவர் பயங்கரவாதத்திற்கும் ஆயுத போராட்டத்திற்கும் ஆதரவு வழங்கியதாகக் கூறிய இந்தப் பரப்புரையாளர்கள் இந்த முத்திரை வெளியாகியதன் மூலம் தமிழர் அரசியல் அபிலாஷைகளுக்கு கனடியத் தபால் இலாகா உதவியிருப்பதாக குற்றம் சுமத்தியிருந்தது.

இருப்பினும் இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்த கனடியத் தபால் திணைக்களம் இந்த முத்திரையை கனடிய அரசு வெளியிடவில்லை என்றும் கனடாவில் வழமையாக நடைமுறையிலுள்ள சட்டத்திட்டங்களுக்கு அமைவாகவே இந்த முத்திரையும் வெளிவந்துள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்துகருத்து வெளியிட்ட கனடிய முத்திரை வெளியீட்டு திட்ட அதிகாரி ஜிம் பிஃலிப்ஸ் நவரத்தினத்தின் அரசியல் வாழ்வுக்கும் முத்திரை வெளியீட்டிற்கும் சம்பந்தமில்லை என்று கூறினார்.

குடும்ப உறவினர்கள் இந்த கனடிய முத்திரைகளைப் பெறுவதற்கு வாய்ப்பிருக்கின்றது. நவரத்தினத்தின் மகன் தனது விருப்பத்தின் பேரில் இந்த முத்திரைகளை வெளியிட கோரிக்கைவிடுத்து உரிய தொகையைக் கட்டினார்.

அதன் அடிப்படையில் 150 முத்திரைகள் வெளியிடப்பட்டன என்று அவர் விளக்கமளித்தார். கடந்த நவம்பர் 22 ஆம் திகதி கனடாவின் கியூபெக் மாகாணத்தில் உள்ள மொன்றியல் நகரில் தமது 97-வது வயதில் காலமான வி.நவரத்தினம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவராவார். (எ-5)

# ஆசிரிய மாணவர்களுக்கு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் 2006 ஆம் ஆண்டு பயிற்சியை நிறைவு செய்த ஆசிரிய மாணவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

அன்று காலை 10 மணிக்கு முக்கியமான கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். (ச)

# சங்காபிஷேகம்

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோவில் மகாகும்பாபிஷேக தின சங்காபிஷேக விழா நாளை நடைபெறவுள்ளது.

அன்று காலை 9 மணிக்கு சங்காபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகும். மாலை விசேட பூஜை, திருவூஞ்சல் என்பன இடம்பெறும். (ச)

# விண்ணப்பம் கோரல்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதியின் முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

க.பொ.த.(உ/த) பரீட்சையில் கணக்கியல், வர்த்தகமும் நிதியும், பொருளியல் ஆகிய பாடங்களில் ஒன்றைக் கொண்ட 3 பாடங்களில் சித்தி மற்றும் க.பொ.த.(சா/த) பரீட்சையில் அல்லது உயர் தரப் பரீட்சையில் இந்து சமயத்தில் சித்தி பெற்றிருத்தல் ஆகிய கல்வித் தகைமைகளோடு இந்து சமயத்தைச் சார்ந்த விண்ணப்பதாரிகள் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். (ச)

முட்டாள்கள் நிறைந்த தேசத்தில் அறிஞன் கடவுளாகின்றான். எல்லோரும் அவனை வணங்குவார்கள். ஆனால் அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றமாட்டார்கள்.

-பெர்னாட்ஷா

வலம்புரி

# நோர்வேயின் பணியை அமெரிக்கா முன்னெடுக்குமா?

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு அமெரிக்கா விசேட தூதுவரை நியமிக்க வேண்டும். இவ்வாறு அமெரிக்க சட்ட வல்லுநர் குழு வெள்ளை மாளிகைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கேட்டுள்ளது.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த 38 சட்டவல்லுநர்கள் கொண்ட குழு ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இலங்கையில் நடைபெறும் படுகொலைகளால் அங்குள்ள தமிழ் மக்கள் பேரவலங்களைச் சந்தித்துள்ளனர்.

எனவே இப்பரிதாப நிலையைப் போக்குவதற்கு அமெரிக்கா விசேட தூதுவரை நியமித்து அங்கு சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென சுட்டிக் காட்டியுள்ளது.

இலங்கைத் தமிழர்கள் தமது சொந்த நாட்டிலேயே வாழும் அருகதை அற்றவர்களாக - அநாதைகளாக - எந்தநேரமும் படுகொலை செய்யப்படலாம் என்ற உயிருக்கு உத்தரவாதமற்ற நிலையில் வாழ்கின்றனர் என்பதை உணர்ந்து அமெரிக்க ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியமைக்காகச் சட்ட வல்லுநர் குழுவுக்கு நன்றி கூறிகொள்ளலாம்.

ஈழத் தமிழர் விடயத்தில் அமெரிக்காவின் போக்கு நீண்ட காலமாகப் பாதகமாகவேயிருந்து வந்தது. எதற்கெடுத்தாலும் தமிழர்கள் தரப்பில் குறை காண்பதுவே அந் நாட்டின் வழக்கமாகவிருந்தது.

அரசுக்கு உதவ வேண்டும் என்ற கோட்பாடே இலங்கை விடயத்தில் அமெரிக்காவினால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இது இலங்கைத் தமிழர்கள் அடக்கப்படுவதற்கும் அடிமைப்படுத்தப்படுவதற்கும் சாதகமாயிற்று.

இந்நிலையில் இலங்கைத் தமிழ் மக்கள் படும் அவலங்களை வெளிக்காட்டி சட்டவல்லுநர்கள் எழுதிய கடிதத்திற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டிபிள்யு.புஷ் என்ன பதில் அளிக்கப் போகின்றார் என்பது ஆவலோடு எதிர்பார்க்கப்படும் விடயமாகும்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கு விசேட தூதுவரை நியமியுங்கள் என்ற அமெரிக்க சட்டவல்லுநர்களின் கடிதம் இந்தியாவுக்கு சிக்கலைக் கொடுக்கவே செய்யும்.

அதாவது இலங்கையில் அமெரிக்காவின் தலையீடு இல்லாது இருக்க வேண்டுமென்பதே இந்தியாவின் விருப்பம். ஆனால் அந்த விருப்பத்திற்கு மாறாக அமெரிக்கா விசேட தூதுவரை நியமித்து இலங்கையில் சமாதானத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முனைப்புப் பெற்றிருப்பதால் இலங்கை தொடர்பிலான இந்தியாவின் கொள்கைகள் - நிலைப்பாடுகள் மாற்றமடையவே செய்யும்.

எதுவாயினும் சட்ட வல்லுநர்களின் கோரிக்கைக்கு அமெரிக்க ஜனாதிபதி சாதகமான பதிலை வழங்குவாராயின், நோர்வேயின் பணி அமெரிக்காவிடம் மாறும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கான அனுசரணைப் பணியை அமெரிக்கா பொறுப்பேற்றுக் கொள்ளுமாயின் அங்கு சாதகமாகவோ அன்றி பாதகமாகவோ ஓர் முடிபு எட்டப்படும் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

# இடம்பெயர்ந்த மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர். உதவி

யாழ்.குடாநாட்டில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் ஆலயம் உணவுப் பொருள்கள் அற்ற உதவிப் பொருள்களை மீண்டும் வழங்க ஆரம்பித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் யாழ்.குடாநாட்டில் இடம்பெற்று வரும் வன்முறைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்கு கடந்த நவம்பர் மாதம் முதல் உணவுப் பொருள்கள் அற்ற உதவிப் பொருள்களை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் ஆலயம் வழங்கிவந்தது.

எனினும் யாழ்.குடாநாட்டில் ஏற்பட்ட பொருள் தட்டுப்பாடு காரணமாக டிசம்பர் மாதம் நடுப்பகுதியில் இந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில் யாழ்.குடாநாட்டில் மீண்டும் பொருள்கள்கிடைக்கப் பெற்றிருப்பதனால் ஜனவரி மாதம் முதல் உதவிப் பொருள்களை வழங்கும் நடவடிக்கையை யு.என்.எச்.சி.ஆர். மீண்டும் ஆரம்பித்தது.

இதற்கமைய குடாநாட்டில் இடம்பெயர்ந்த 2 ஆயிரத்து 98 குடும்பங்களுக்கு உணவற்ற உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களில் ஒருவருடைய வருமானத்தை நம்பியிருக்கும் குடும்பங்களும்உள்ளன. இவர்கள் நிவாரணங்கள், கூடாரங்கள், நீர்வசதி, சுகாதார வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில் இருக்கின்றனர். இந்த விடயங்கள் மனிதாபிமான பிரச்சினைகள் குறித்த கவனம் செலுத்த வேண்டியுள்ளது என யு.என்.எச்.சி.ஆரின் யாழ்.கிளையின் தலைவர் விடோ ரெனி தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் சாவகச்சேரி, கரவெட்டி, கோப்பாய் மற்றும் தெல்லிப்பழைப் பகுதியில் இடம்பெயர்ந்த மக்களுக்கு யு.என்.எச்.சி.ஆர்.உதவிப் பொருள்களை வழங்கியுள்ளது.ஒவ்வொரு வியாழக்கிழமையும் இந்த உதவிப் பொருள்கள் வழங்கவிருப்பதாகத் தெரியவருகின்றது. (சி)

# இடம்பெயர்ந்த மக்கள் கடத்தப்படுகின்றனர்!

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு செல்லும் மக்கள் கடத்தப்படுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சவுக்கடிப் பகுதியில் ஆயுதக் குழுவினர் இணைந்துமேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 10 இளைஞர்களை கடத்திச் சென்றுள்ளனர். இவ்வாறான கடத்தல்களைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகின்றது.

சவுக்கடிச் சம்பவம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் அந்தப் பகுதியில் நின்ற போது இடம்பெற்ற ஒரு சம்பவம்எனவும் அதுபோல பல கடத்தல் சம்பவங்கள் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்று வருவதாகவும் தெரியவருகின்றது.

இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்த மக்கள் முகாமை விட்டு வெளியேறிய பின்னர் கடத்திச் செல்லப்பட்ட இரு சம்பவங்கள் குறித்த முறைப்பாடு தமக்குக் கிடைக்கப்பெற்றிருப்பதாக மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இக் கடத்தல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.மட்டக்களப்பு மாவட்டத்தில் காணப்படும் பாதுகாப்புச் சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்தமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

விடுதலைப்புலிகளின் ஆதரவாளர் என்ற பெயரில் இடம்பெயரும் மக்கள் படையினரால் கடத்திச் செல்லப்படுகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்கள் பலர் கடத்தப்படும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-3)

# இலங்கை அமைதிக்குத் தீர்வு அரசியல் தீர்வு மட்டுந்தான்

## கருணாநிதிக்கு அமைச்சர் டக்ளஸ் கடிதம்

(கொழும்பு)

அமைதித் தீர்வுக்கு அர்த்தமுள்ள அரசியல் தீர்வு மட்டுந்தான் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டு[illegible]ளதாவது,

ஈழத் தமிழர்கள் எழுந்தால் எழுவதற்கும் அழுதால் அழுவதற்கும் உயிர் பிரிந்தால் உயிர் துடிப்பதற்கும் என்று தளம் கொடுத்த தலைமகன் நீங்கள். ஈழத் தமிழர்கள் விரும்பும் வாழ்வியல் உரிமையையும் கொண்டிருக்கும் அரசியல் உணர்வும் நீங்க[illegible] அறியாதவைகள் அல்ல.

ஆனாலும் எமது மக்களின் குரலாக உங்கள் கவனத்துக்கென்று கருதி இம்மடலை எழுதுகின்றேன். வெறும் உணர்ச்சிகளின் வேகமும் துப்பாக்கிகளின் மோகமும் யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கின்றது.

இந்த வேகமும் மோகமும் மக்கள் மீதான நேசமென்று கருதி விட முடியாது. இது தனியொரு குழுவின் இருப்புக்கான யுத்தமே ஒழிய மக்களின் விருப்புக்கான விடயமல்ல. வெல்லப்பட முடியாத ஒரு யுத்தத்தில் தான் கொல்லப்பட வேண்டும் என்று எந்த இனமும் விரும்பாது.

அப்பாவி உயிர்களின் அழிவுகளில் அரசியல் ஆதாயம் தேடும் சுய நலன்கள் எமது மண்ணையும் மக்களையும் சுடுகாடு நோக்கி வழிகாட்டுகின்றது. இழந்த சுதந்திரத்திற்காக எழுந்த எமது தேசம் இருந்த சுதந்திரத்தையும்இழந்து நிற்கின்றது.

சோறு இல்லை என்று அழுகின்ற வேதனை வெண்பாக்களும் இங்கு தேசிய கீதமாக ஒலிக்கின்றது. பகுத்தறிவுப் பாசறையில் பட்டறிந்த அனுபவங்களும் கொண்டவர் கலைஞர் என்று ஈழத் தமிழர்கள் அறிவார்கள்.

ஈழத் தமிழர்களின் இன்றைய அவலம் தரும் வாழ்விற்கும் அச்சம் தரும் போருக்கும் யார் காரணம் என்பதை புரிந்திருப்பீர்கள். மக்களது பிரச்சினை வேறு புலித் தலைமையின் பிரச்சினை வேறு. எமது மக்கள் அமைதிப் பூங்காவில் அரசியல் உரிமை பெற்றவர்களாக அகமகிழ்ந்து வாழ விரும்புகிறார்கள்.

சம உரிமையோடு சமாதான சக வாழ்வு காண விரும்புகிறார்கள். இருதரப்பும் கொண்டிருக்கும் இருவேறு பிரச்சினைகளைக் கருத்திற்கொண்டு காரியமாற்ற கலைஞர் முன்வர வேண்டும் என்பதே எமது மக்களின் விருப்பங்களாகும்.

யுத்தத்தால் யாரும் வெல்ல முடியாது. யுத்தம் தரும் அழிவுகளுக்கு யாரும் அர்த்தம் சொல்ல முடியாது. ஆகவே அமைதிக்குத் தீர்வு அர்த்தமுள்ள ஒரு அரசியல் தீர்வு மட்டுந்தான். அதற்காக நீங்கள் இனிவரும் காலங்களில் இன்னமும் பல மடங்கு பங்காற்றுவீர்கள் என நான் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கின்றேன் என்றுள்ளது. (எ)

# ஊர்காவல் படை வீரர் கொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

வவுனியா ஈரப்பெரியகுளம் பிரதேசத்தில் கடந்த 5 ஆம் திகதி இரவு ஊர்காவல் படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று அதிகாலை ஆர்ப்பாட்டம் ஒன்று நடாத்தப்பட்டுள்ளது.

ஊர்காவல் படையினர் கொல்லப்படுவதனை நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துப் பிரதேசவாசிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஏ-9 வீதியை மறித்து ரயர்களினை எரித்து தமது எதிர்ப்பினை வெளிக்காட்டியுள்ளனர். இவ் ஆர்ப்பாட்டம் காரணமாக போக்குவரத்து சுமார் 2 மணி நேரம்வரை பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாப் பொலிஸாரின் தலையீட்டினையடுத்துப் போக்குவரத்து வழமைக்குத் திரும்பியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-3)

# விடுதலைப்புலிகளின் சடலங்கள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிப்பு

(மட்டக்களப்பு)

காத்தான்குடி, கோவிற்குளம் மற்றும் காங்கேசன் ஓடை ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்ட இரு தமிழீழ விடுதலைப்புலிகளின் சடலங்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த இந்தச் சடலங்கள் நேற்று நண்பகல் மாவட்ட நீதிவானின் மரண விசாரணைகள் நடத்தப்பட்டதனையடுத்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் இவ்விருவரது சடலங்களையும் கரடியனாறு கறுப்புப்பாலம் ஊடாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-3)

# ஐ.நா.அலுவலகம் அரசுக்கு எதிராகவும் புலிகளுக்கு ஆதரவாகவும் செயல்படுகிறது

## விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

ஐக்கிய நாடுகள் சபையின் கொழும்பு அலுவலகம் அரசாங்கத்திற்கு எதிராகவும் விடுதலைப்புலிகளுக்கு சார்பாகவும் செயற்பட்டு வருகின்றது என ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் கொழும்பு மாவட்ட எம்.பியுமான விமல் வீரவன்ச பாராளுமன்றத்தில் குற்றஞ்சாட்டினார்.

கொழும்பில் உள்ள ஐ.நா.அதிகாரிகள் இராஜதந்திரிகளுக்குரிய வரப்பிரசாதங்களை அனுபவித்துக் கொண்டு நாட்டைப் பிரிக்கப் போராடும் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகப் பேசிவருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் சபாநாயகர் வி.ஜே.மு.லொக்குபண்டார தலைமையில் கூடியதும் வழமையான தினப்பணிகள் இடம் பெற்றன.

அதனையடுத்து சபாநாயகரின் அனுமதியுடன் விசேட கூற்று ஒன்றை விமல் வீரவன்ச எம்.பி.சமர்ப்பித்து உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது, ஐ.நாவின் கொழும்பு அலுவலகத்தில் பணியாற்றிய மொகான் சமரநாயக்க புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை கொண்டிருந்தமையினாலும் வெளிநாட்டு அடிமைத்தனத்துக்கு எதிராக செயற்பட்டமையினாலேயே அவருக்கு எதிராக ஐ.நா.அலுவலகம் நடவடிக்கை எடுக்க முயற்சி செய்து வருகிறது.

ஐ.நாவின் சகல நடவடிக்கைகளும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு விரோதமாகவே உள்ளன. அதன் ஒருகட்டமாகவே ஐ.நா.வின் சிறுவர் விவகாரங்களுக்கான ஆணையாளராக ராதிகா குமாரசாமி நியமிக்கப்பட்டுள்ளார்.

கருத்து சுதந்திரத்தை வெளியிடும் உரிமை சகலருக்கும் உண்டு என்பது ஐ.நாவின் பிரகடனமாகும். இந் நிலையில் மொகான் சமரநாயக்க புலிகளைப் பற்றி எழுதிய மேற்படி விடயமும் அவரின் கருத்துச்சுதந்திரம் தானே ஆகவே ஏன் அவர் மீது ஐ.நா.நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார். (ச)

## சிறுவர்களை படையில் சேர்ப்பதற்கு...

கொடூரமான சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாவும் இந்த மாநாட்டில் இறுதித்தினத்தில் மேற்படி நாடுகள் உறுதியளித்துள்ளன.

இலங்கை உட்பட மேலே குறிப்பிட்ட நாடுகளில் சுமார் 2 இலட்சத்து 50 ஆயிரம் சிறுவர்கள் ஆயுதப்போராட்டங்களில் பலாத்காரமாக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் இம் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## இலங்கைக்கு வரவிருந்த மூவர் உட்பட 5பேர் கைது

(கொழும்பு)

இராமேஸ்வரம் கடற்கரையிலிருந்து இலங்கைக்கு தப்பிச்செல்ல முயன்ற அகதிகள் மூவர் உட்பட ஐவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட ஏனைய இருவரும் முகவர்களாவர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, இலங்கை திருகோணமலையைச் சேர்ந்த முகுந்தன் (வயது 26), அவரது மனைவி ராதிகா (வயது 21),அவரது சகோதரி சாந்தி (வயது 20) மற்றும் பத்துமாதக் குழந்தை தினேஷ் ஆகியோர் கடந்த ஒரு மாதத்திற்கு முன் விமானம் மூலம் சென்னை வந்துள்ளனர்.

சென்னை, மதுரை போன்ற இடங்களுக்குச் சென்று விட்ட இவர்கள் படகு மூலம் சட்ட விரோதமாக இலங்கைக்குச் செல்வதற்காக இராமேஸ்வரத்துக்கு வந்துள்ளனர்.

இவர்களை இலங்கையில் இருந்து வரும் படகில் ஏற்றிவிட முகவர்களான தமிழகத்தைச் சேர்ந்த வேடராஜ் (வயது 22) இவரது தம்பி செல்வகுமார் (வயது 20) ஆகிய இருவரும் வந்துள்ளனர்.இது குறித்து இரகசியத் தகவல் கிடைத்ததையடுத்து இவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதைத் தொடர்ந்து ஐந்து பேரையும் தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்தில் அவர்கள் ஒப்படைத்துள்ளனர்.இது குறித்து பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். (ச-5)

## சு.கவின் தீர்வு யோசனைகள்...

அந்தத்தீர்வுத் திட்டத்தை நடை முறைப்படுத்தவேண்டிய அவசியம் மற்றும் வடக்கு கிழக்குப் பிரச்சினை தொடர்பாக சிறி லங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைக்கு முரண்படாத யோசனைகளும் மாற்று யோசனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளருமான மைதிரிபால சிறிசேன தெரிவித்தார்.

தீர்வு யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டதும் அது குறித்து ஆராயப்பட்ட பின்னர் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## ஐக்கிய தேசியக்கட்சிக்கான...

அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் கட்சியின் ஆடைகள் போல் இருந்தவர்கள் எனச் சுட்டிக்காட்டிய அவர் அடிமட்டத்தில் இருந்து கட்சிக்காகச் செயற் பட்டு வரும் ஆதரவாளர்கள் பலர் தம்மிடம் இருப்பதாகக்கூறினார்.

ஐக்கிய தேசியக்கட்சிக்குள் ஜனநாயகம் இல்லை என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டை கருணாதிலக மறுத்துள்ளார். ஏனைய கட்சிகள் தமது தலைவர்களை அடிக்கடி மாற்றுவது போல நாம் மாற்றுவதில்லை. இதுவரை ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஏழுபேரே தலைமை வகித்துள்ளனர். நாம் தற்பொழுது ஏழாவது தலைவரின் கீழ் செயல்பட்டுவருகின் றோம் என்றார் அவர். (ச-5)

## விடுதலைப்புலிகள் மீதான...

தற்போதைய நிலைமைகள் தொடர்பாக லண்டனில் வாழும் மக்க ளுக்கு விரிவான விளக்கத்தை வழங்கும் நோக்கத்துடன் பல்வேறு சந்திப்புக்களையும கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண நடத்தி வருகிறார்.

நாட்டின் ஜனாதிபதியால் கூட தனது மாளிகைக்குள் சுதந்திரமாக இருக்க முடியவில்லை. சுதந்திர தின வைபவத்தில் ஜனாதிபதியைப் பூடைசூழந்த இராணுவத்தினரும் இராணுவ கனரக தளபாடங்களும் குவிக்கப்பட்டிருந்தன.

ஜனாதிபதியும் தனது நாட்டில் சுதந்திரமற்று இருப்பதையே இது சுட்டிக்காட்டுகிறது என்று விளக்கமளித்தார்.

இலங்கையில் வாழும் மக்களுக்கு ஒட்டுமொத்த சுதந்திரம் தேவை என்பதை சர்வதேச சமூகம் உணர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடைக ளை முழுமையாக நீக்கி தொடர்ச்சியான பேச்சுக்களை அரசு, விடுதலைப்புலிகளுடன் முன்னெடுக்க பகிரங்க கோரிக்கை விடுப்பது அவசியம் என்றும் இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண வேண்டுகோள் விடுத்தார். (எ-1)

## சூட்டுக்கொலை...

அடையாளம் காணப்படவில்லை. வீடொன்றினுள் குளிக்கச்சென்ற போது அவர் சுடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இராணுவத்தினர் மீது கிரனைட் தாக்குதல் நடத்த முற்பட்டபோது அவர் சுடப்பட்டதாக தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (எ-101)

## அவசரகாலச்...

அளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு மற்றும் மேலக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளினைத் தவிர்ந்த அனைத்து கட்சிகளும் அவசர காலச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். (ச-3)

## புத்தூரில்...

புத்தூர் கலைமதி வீதியில்வைத்து நேற்று முன்தினமிரவு இளைஞன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். வீதியால் நடந்து சென்று கொண்டிருந்தபோது அவர் சுடப்பட்டதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

சுடப்பட்டவர் வவுனியா நெடுங்குளத்தைச் சேர்ந்த விஜயரட்ணம் விஜயராகவன் (வயது 24) என அவரது தேசிய அடையாள அட்டையின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளார். இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை மல்லாகம் மாவட்ட நீதிபதி சறோஜினி இளங்கோவன் மேற்கொண்டார். சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது . (ச-5)

## கட்சி தாவிய...

விட்டுவிலகி அரசில் இணைந்து அமைச்சர் பதவிகளை ஏற்றது என்பன கட்சியின் ஒழுக்கவிதிகளை மீறும் செயல் எனவும் அதற்கு அவர்களிடம் இருந்து விளக்கங்கள் கோரப்பட உள்ளதாகவும் ஐ.தே.க.வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச-5)

## முருங்கன்...

கிலோ எடையும் 8 அடி 8 அங்குலம் நீளமுள்ள இப் பீரங்கி தொடர்பான ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு புராதன ஆராய்ச்சி திணைக்களத்தின் உதவி பெறப்பட இருப்பதாக சிலாபப் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (ச-5)

## கடந்த மாதம் மட்டும்...

பாராளுமன்றத்தில் தெரிவித் துள்ளார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதகாலம் நீடிப்பது தொடர்பான பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் சில பகுதிகளான சம்பூர் மற்றும் வாகரையை படையினர் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளதாக பிரதமர் சபையில் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் விடுதலைப்புலிகளுக்கு பாதுகாப்புத் தகவல் வழங்கியமை மற்றும் பாதுகாப்புப் பிரிவுத் தலைவரை கொலை செய்யும் முயற்சிக்கு உதவி வழங்கியமை தொடர்பான சில சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

நாட்டின் அபிவிருத்தி பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதுடன் பயங்கரவாதத்தை ஒடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென அவர் குறிப்பிட்டார்.

கொழும்பைச் சூழவுள்ள பிரதேசங்களில் பாதுகாப்பு நிலைமைகளுக்கு அமைய பொருளாதார மையங்கள் இலக்கு வைக்கப்படாமல் பொது மக்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் அரசாங்கத்திற்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ளது எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார். (ச-3,5)

## போர் நிறுத்த உடன்படிக்கையை...

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தாக்குதல்களுக்குப் பதில் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதாகக்கூறி அதனை நியாயப்படுத்தினால் வன்முறைகள் தொடர்ச்சியாக இடம் பெற்றுக்கொண்டே இருக்கும்.

இந்த நிலையில் நாம் ஒரு தரப்பினரை மாத்திரம் குற்றஞ்சாட்டப்போவதில்லை. இரண்டு தரப்பினருக்குமே இதில் பாரிய பொறுப்பு உள்ளது.

மோதல்கள் இடம் பெறும் பகுதிகளில் இருக்கும் மக்களின் வாழ்க்கை நிலைமை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. மக்கள் ஒரு மாதத்திற்கு ஒவ்வொரு இடம் மாறிக் கொண்டே இருக்கிறார்கள்.

சாதாரண நிலைமையை ஏற்படுத்துவதற்குத் தடையாக இருப்பது போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல்களே. ஏ-9 வீதி மூடப்பட்டமை மற்றும் ஆயிரக்கணக்கானவர்கள் இடம் பெயர்ந்துள்ளமை போன்றன ஏற்றுக் கொள்ள முடியாதவை,

மக்கள் தமது பகுதிகளில் இருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டு முகாம்களில் வசித்து வருகின்றனர். கிளைமோர் குண்டுத் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன என கொழும்பு ஊடகத்திற்கு வழங்கிய செவ்வியில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் கூறினார்.

பொதுமக்கள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தப்படுகிறார்கள் என்ற பதத்தை நாம் பயன்படுத்துவதில்லை எனத் தெரிவித்த அவர், எனினும் அப்பாவிப் பொதுமக்கள் மோதல்கள் இடம் பெறும் இடங்களுக்கு மிகவும் அண்மையில் இருக்கிறார்கள் என்பது உண்மை எனக்கூறினார்.

கண்காணிப்புக்குழுவினரின் செயற்பாடு வரையறைக்குள் ஆயுதக்குழுக்கள் தொடர்பாக எதுவும் கூறப்படவில்லை என்றும் இரண்டு தரப்பினருக்கு இடையில் கைச்சாத்திடப்பட்டதாகவே போர் நிறுத்த உடன்படிக்கை காணப்படுகின்றது என்றும் தெரிவித்திருக்கும் அவர், எனினும் போர் நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் இடங்களில் கருணா தரப்பினரின் செயற்பாடுகள் காணப்படுகிறது எனவும் யாருடைய கட்டுப்பாட்டுப் பகுதியில் அவர்கள் செயற்படுகிறார்களோ அந்தத் தரப்பினர் தான் அதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும்.

அத்துடன் பாதுகாப்புக் காரணங்களால் போர்நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதிகளுக்கு தம்மால் செல்ல முடியாது இருப்பதாக சுட்டிக்காட்டிய அவர் நாம் போர் நிறுத்தத்தையே கண்காணிக்கிறோம். மோதல்களை அல்ல.

மோதல்கள் இடம் பெறும் பகுதிகளை கண்காணிப்பாளர்கள் சென்று பார்வையிட்டாலும் உடனடியாக அவர்கள் கொழும்புக்கு திரும்பிவிடுவார்கள்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்த நடைமுறை பின்பற்றப்பட்டாலும் அனைத்துப் பகுதிகளிலும் தமது செயற்பாடுகள் தொடருமெனவும் தேவை ஏற்படும்போது செயற்படுவதற்கு தயாராக அவசர குழுவொன்று செயற்படும்.

வன்முறைகள் மேலும் அதிகரித்தாலும் தமது கண்காணிப்புப் பணிகளை கைவிடுவது தொடர்பான தீர்மானம் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை எனவும் ஓமர்சன் குறிப்பிட்டார்.

போர் நிறுத்த உடன்படிக்கை இன்னமும் செயலிழந்து விடவில்லை. மோதல்களில் ஈடுபட்டிருக்கும் இரண்டு தரப்பினருக்கும் அழுத்தம் கொடுக்கும் ஒரு ஆவணமாக போர் நிறுத்த உடன்படிக்கை காணப்படுகிறது.

சமாதான முயற்சிகள் தொடர்வதனால் அதில் இரண்டு தரப்பினரையும் ஒன்றிணைப்பதற்கான ஒரே ஒரு ஆவணமாக இது மட்டுமே உள்ளது என்று தெரிவித்த ஓமர்சன் போர் நிறுத்த உடன்படிக்கையை தொடர்ந்தும் மதித்து நடப்பதாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தம்மிடம் உறுதியளித்திருப்பதுடன் அரசாங்கத் தரப்பும் அவ்வாறானதொரு உறுதிமொழியை வழங்கியிருப்பதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழான டெய்லி மிரலுக்கு வழங்கிய செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (எ-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.02.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.